Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 20 | 04-07-94 | திங்கட்கிழமை | ஓசை 136

## 'தரணியெங்கும் தமிழோசை' உலக தமிழ் தொலைக்காட்சி

உலகத் தமிழ் தொலைக் காட்சி ஒன்று 'தரணியெங்கும் தமிழோசை' என்ற பெயரில் விரைவில் பிரிட்டனில் இருந்து ஒளிபரப்பாகவுள்ளது. அன்றாடம் ஒரு மணி நேர சேவையாக ஐரோப்பா முழுவதும் செய்மதி மூலமாக ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சியாக இது ஆகஸ்டில் ஆரம்பிக்கும். இச்சேவை விரைவில் அமெரிக்கா, கனடா, மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்க நாடுகளுக்கும் விரிவாக்கப்படும். இத்தமிழ் ஒளிபரப்பு தமிழ் அலைகள் என்ற (6ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகளின் தாக்குதல்கள் நிகழலாம்; விமானப்படைத் தலைமையகம் மூட முடிவு!

## கரும்புலிகள் நாள் குறித்து அச்சம்

(கொழும்பு)

நாளை விடுதலைப் புலிகள் அனுஷ்டிக்கவிருக்கும் கரும்புலிகள் தினத்தையொட்டி சிறிலங்கா விமானப்படைத் தலைமையகம் தற்காலிகமாக மூடப்படும் என ஏ.எப்.பி. செய்திகள் தெரிவிக்கின்றன. கரும்புலிகள் தினத்தையொட்டி கொழும்பிலுள்ள படைத் தலைமையகங்களை புலிகள் தாக்கலாமென அதிகாரிகள் கருதுவதே இதற்குக் காரணம் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பினுள் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படையினரான கரும்புலிகள் பல தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இதில் முக்கியமாக தாக்குதலுக்கு இராணுவ இலக்குகள் உள்ளாகலாமென தகவல் கிடைத்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சிறிலங்கா விமானப்படை தலைமையகம் உட்பட விமானப் படையின் இலக்குகளையே தாக்குவதற்கு விடுதலைப் புலிகள்திட்டமிடுவதாகத் தகவல்கள் தெரிவிப்பதாகப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், ஜூலை 05 இல் விடுதலைப் புலிகள் இய (6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்வாதிகளைக் கொலை செய்யத் திட்டமாம்

### புலனாய்வுத்துறை அறிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தலையொட்டி பிரசாரங்களை மேற்கொள்வதற்காக மேடைகளில் தோன்றும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை கொல்ல விடுதலைப் புலிகளின் தாக்குதல் பிரிவு ஒன்று திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் புலனாய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

நாட்டின் அரசியல் தலைமையை இவ்வாறு முற்றாக (6ஆம் பக்கம் பார்க்க)

### விமானப்படைத்தளம் முன் நின்ற

## அநாமதேய ஜீப் வண்டி ஏற்படுத்திய பரபரப்பு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையில் உள்ள சிறிலங்கா விமானப்படை முகாமிற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த அநாமதேய ஜீப் வண்டி ஒன்றினால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்ற நிலை காணப்பட்டது. இச் சம்பவம் அண்

## பாடசாலைகள் தோறும் கரும்புலிகள் நாள் ஏற்பாடு

கரும்புலிகள் நாளான நாளை அனைத்து மாணவர்களும் தத்தமது பாடசாலைகளில் தேசியக்கொடி ஏற்றி மௌன அஞ்சலி, மலரஞ்சலி செலுத்துவதோடு கரும்புலிகளின் படங்களை பாடசாலை மண்டபங்களில் திரை நீக்கம் செய்யுமாறும், சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமாறும் கரும்புலிகளின் நினைவாக அடையாளப் பட்டியை அணிந்து கொள்ளுமாறும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு;

இன்றைய மாணவர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள். மாணவர்கள் பெறும் ஆற்றலும் அறிவும் எமது நாட்டை பொருண்மிய ரீதியாகவும், விஞ்ஞான ரீதி விடிவிற்காக, உணர்வுபூர்வமாக சிந்தித்து தற்கொடை செய்வதை ஆழமாக உற்று நோக்கவேண்டும். இவர்கள் ஒவ்வொருவரும் எமது மண்ணையும் மக்களையும் எவ்வளவு ஆழமாக நேசித்தார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இவர்களின் தாக்குதலால் இன்று எமது எதிரி நிலை (6 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் உருவப்பட ஊர்தி இன்று பவனி

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகளின் உருவப் படங்களைத் தாங்கிய விசேட ஊர்தியானது இன்றும் தொடர்ந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு தென்மராட்சி வரை சென்று அங்கிருந்து வடமராட்சியை நோக்கிச் சென்றடையவுள்ளது.

இன்று காலை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் இவ் ஊர்தியானது (6 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நினைவாக கோட்ட ரீதியாக கூட்டங்கள்

பட்டது. இச் சம்பவம் அண்மையில் நடைபெற்றது.

இராணுவத்தினர், வெடிகுண்டு நிபுணர்கள் குழு அழைக்கப்பட்டு இந்த ஜீப் வண்டி காலிமுகத்திடலுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாகவும், விஞ்ஞான ரீதியாகவும்கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக அமையும்.

கரும்புலிகள் நாள் நினைவு கொள்ளப்படும் இன்றைய நாளில் எமது மாணவர்கள், கரும்புலிகள் எமது மண்ணின்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாள் நாளை குடாநாடெங்கும் மிக எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

முதலாவது கரும்புலித்தாக்குதல் நிகழ்த்தப்பட்ட யூலை 5ம் திகதியான நாளை தமிழீழமெங்கும் இக்கரும்புலிகள் தினம் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள் நாள் குறித்து கொழும்பில் பதற்றம்

## 1000 கணக்கில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கரும்புலிகள் நாளையடுத்து கொழும்பில் பெரும் பதற்றம் நிலவுவதாகவும் கொழும்பு நகரில் பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆயிரக் கணக்கில் இளைஞர் கைதாகியுள்ளனர் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரின் நுழைவாயில்களில் கடந்த சிலதினங்களாக வீதித் தடைகள் போடப்பட்டு வாகனங்கள், பயணிகள் அணு அணுவாக சோதனையிடப்படுவதாகவும் சந்தேகத்துக்கு இடமானோர் தடுத்து வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கரும்புலிகள் நாளில் குண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஆதரவு தமக்கே எனக்கூறி வாக்கு சேகரிக்க தமிழ்க்குழு முயற்சி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சில தமிழ்க் கட்சிகள் தமக்கு விடுதலைப் புலிகளின் ஆதரவு உள்ளது எனக்காட்டி வாக்குகளை சேகரிக்க முயற்சித்து வருவதாக கொழும்பு வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச்சில் நடைபெற்ற கிழக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இதே தந்திரத்தை சில தமிழ் குழுக்கள் கையாண்டதை இவ்வார இதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது தமிழ் கட்சிகளின் உறுப்பினர்கள புலிகளை தாக்கிப் பேசுவதை பெருமளவில் குறைத்து விட்டதை காணக் கூடியதாக இருப்பதாகவும் அது மேலும் குறிப்பிடுகிறது.

# இனநெருக்கடிக்கு தீர்வு காணும் கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டும்

## கொழும்பு வாழ் தமிழர் நடவடிக்கைகுழு

(கொழும்பு)

சிறுபான்மை இனங்களை சேர்ந்த மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலிலேயே இனநெருக்கடிக்கு நியாயமான ஜனநாயக ரீதியிலான தீர்வு ஒன்றைக் காண்பதில் உறுதிப்பாடும், கடப்பாடும்கொண்ட வேட்பாளர்களுக்கு பெருமளவில் வாக்களிக்க வேண்டும் என கொழும்பு வாழ் தமிழர் நடவடிக்கைக்குழு வேண்டியுள்ளது.

இது தொடர்பாக இப்புதிய அமைப்பின் தலைவர் டாக்டர் கே. வேலாயுதபிள்ளை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல் சிறுபான்மையினரை பொறுத்தவரை ஒரு பாரதூரமான சவாலாக இருக்கும் அதேவேளை வரவேற்கத்தக்க சந்தர்ப்பமாகவும் உள்ளது சிறுபான்மையினர் பிரச்சினைக்கு தீர்வு காணப் போவதாக கூறிக்கொள்ளும் இரு பிரதான கட்சிகளும் இது விடயத்தில் இதய சுத்தியுடன்தான் இருப்பதாக அப்பாவி பொதுமக்கள் நம்பிக்கை கொண்டு பலசகாப்த காலமாக இக்கட்சிகளுக்கு வாக்குகளை அளித்து ஏமாந்தனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# சமூகரீதியான நிர்வாக அமைப்புக்களுக்கு கூடுதலான அதிகாரப் பரவலாக்கல்

## பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுத்திட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினை தொடர்பான தனது பிரேரணைகளை சமர்ப்பித்து ளது சீரான பொருளாதார சமூக ரீதியான நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்துவதே தமது தீர்வுத்திட்டத்தின் ஒரு பகுதி எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் சிறுபான்மை கட்சிகளின் கவனத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாலோசனைகள் பொதுவானதாகவும் பரந்ததாகவும் இருக்கிறதேயொழிய அடிப்படையில் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் காணப்படவில்லை என தமிழ் அரசியல்வாதி ஒருவர் குறிப்பிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருப்திகரமான அதிகார பரவலாக்கல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள், அதிகாரப் பரவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மூடப்பட்டிருக்கும்

கரும்புலிகள்தினத்தை முன்னிட்டு நாளை அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டைப் பதிவுச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச்செயலகம், விசாரணைப்பகுதிச் செயலகம், யாழ்-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கருப புலிகள் உருவப்படம்

27 கருர்புலிகளினதும் உருவப்படங்களை கொண்ட வர்ணஇணைப்பு இன்றைய ஈழநாதம் நாளிதழுடன் இலவச இணைப்பாகவெளிவருகிறது தவறாது பெற்றுக்கொள்ளவும்.

# அமெரிக்கா இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் எதையும் வகிக்காது

## அமெரிக்க தூதுவர் திருமதி ஷாபர்

(வாஷிங்டன்)

இலங்கை இனப்பிரச்சினையில் அமெரிக்கா மத்தியஸ்த பங்கு எதையும் வகிக்காது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஷாபர் கூறியுள்ளார். அமெரிக்க சமாதான நிறுவனத்தை சேர்ந்த கல்விமான் டேவிட்லிட்டில் இலங்கை தொடர்பாக எழுதிய நூலின் வெளியீட்டு வைபவம் அண்மையில் வாஷிங்டனில் நடைபெற்றது இந் நிகழ்வில் இலங்கையில் மதம், அரசியல் நெருக்கடி எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஷாபர், இலங்கை இனப்பிரச்சினையில் அமெரிக்கா மத்தியஸ்தப் பங்கு எதையும் நாடவில்லை அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டிய வேறு பல நெருக்கடிகள் உள்ளன இலங்கை நெருக்கடியில் மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா விரைவாக பாய்ந்தடித்துக் கொண்டு ஓடினால் பெரும் செலவுகளும் ஏற்படலாம்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ சட்டக்கல்லூரி நேற்று திறந்துவைப்பு

(நமது நிருபர்)

தமிழீழத்தின் முதலாவது சட்டக்கல்லூரி நேற்றுதிறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை நிதித்துறையைச் சேர்ந்த பாண்டியன் ஏற்ற, சட்டக் கல்லூரியின் பெயர்ப்பலகையை கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் திரைநீக்கம் செய்துவைத்தார். தமிழீழ சட்டக்கல்லூரியை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பா

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### A/L இந்துசமயம் 9 வருட வினாத் தாள்கள்

இந்துசமயம் கடந்த கால 9 வருட வினாத்தாள்களின் தொகுப்பு (பகுதி I பகுதி II) சகல பிரபல புத்தக நிலையங்களிலும் விற்பனைக்கு வந்து விட்டது. (8704)

### அக்கரைச் சீமையில் நாவல்

இங்கிலாந்து சென்ற ஓர் அழகிய இளம் தமிழ்ப்பெண்ணுக்கு என்ன நடந்தது? 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை உண்மைக் கதை போலச் சொல்கிறார். பூபாலசிங்கம் புத்தகசாலை. (8411)

### இறைச்சிக் கோழி

முழு நிறையுள்ள இறைச்சிச் சேவல்கள், விறாத்துக் குஞ்சுகள் விற்பனையாகிறது. எமது நல்லின முட்டைகளை அடைவைத்துக் குஞ்சாகத் தரக்கூடியவர்கள் தேவை கலையரங்க அருகாமை உரும்பராய் சந்தி. (8716)

---

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## அமைய சுகாதார தொழிலாளர் பதவிகள் வெற்றிடம்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 15. 07. 1994-ந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்ச் சொல்லப்படும் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் இவ்வலுவலகத்தில் அதற்குரிய படிவங்களைப் பெற்றுத் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(2) ஆகக் குறைந்தது 5-ம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(3) வயது 18க்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(4) வலிகாமம் தெற்கு பிரதேசசபைஎல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
(5) நல்ல ஆரோக்கியமும் நன்நடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 15. 07. 94-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபால் மூலம் ''விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

குறித்த திகதிக்குப் பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
1994-06-28

(சி-9714)

---

# அருள் மிகு குழந்தை யேசுவே



### அற்புதக் குழந்தை யேசுவே!

வியத்தகு முறையில் செயற்படும் ஒப்பற்ற வல்லமை மிக்கவரே, உம்மை அண்டி வந்த பாவி நான் உம்மைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கி நன்றி கூறுகின்றேன். இதுவரை காலமும் நீர் எனக்களித்த எல்லா உதவிகட்காகவும் இன்னும் தரஇருக்கும் ஆன்ம சரீர நன்மைகளுக்காகவும் நன்றி கூறுவது மாத்திரமல்ல, எல்லா மக்களும் உம்மை ஏற்று அன்பு செய்ய வேண்டும் என்ற ஆவல் கொண்டு,

நீர் எனக்களித்த அற்புத வழிநடத்தலை வியந்து போற்றி உம்மை மகிமைப்படுத்துகின்றேன். ஆமென்.

குழந்தையேசு பக்தன்.
(8711)


## தமிழர் பிரச்சினை தீர்வுக்கு வரும் அரசு முயற்சிக்கும்

\- எஸ். நடேசன்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கும் கட்சி தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இதய சுத்தியுடன் முயற்சி எடுக்கும் என்று நம்புகிறேன். இவ்வாறு பிரபல தொழிற்சங்கவாதியான எஸ். நடேசன் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறுகையில், ஒவ்வொரு முறை ஆட்சி மாறும்போதும் தமிழ் மக்கள் தமது பிரச்சினை தீர்க்கப்படும் என்றுதான் ஆவலுடன் காத்திருந்தனர். ஆனால் ஆட்சி பீடமேறிய ஒரு சில மாதங்களில் அவை முறியடிக்கப்பட்டதுதான் காலம் காலமாக நடந்து வந்துள்ளது. எனினும் எதிர்காலத்தில் இந்த நிலை முற்றாக மாறும் என்றே தான் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.


---

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரைவுள்ளது

# "வெதுப்பகம்"

மங்களகரமான

## திறப்பு விழா

எதிர்வரும் 1994. 07. - 06 ம் திகதி காலை 6. 30 மணியளவில் கனகரட்ணம் வீதி, அரியாலையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வெதுப்பகத்தை யாழ்ப்பாணம் ப. நோ கூ. சங்க பொதுமுகாமையாளர் உயர்திரு. த. பரஞ்சோதி அவர்கள் திறந்து வைப்பார். அவ்வமயம் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மக்களின் தேவையில் எங்கள் சேவைகள்

★ பாண் ★ பட்டர் பாண் ★ ரோஸ் பாண்
★ கேக் வகை ★ அடைக் கேக் ★ கல்பணிஸ்
★ தேநீர் பணிஸ்

மற்றும் சிறியவர் பெரியவர்கள் விரும்பி சுவைக்கும் பிஸ்கட் வகைகள்.

தரமானவை! மலிவானவை!
சுத்தமானவை!

"வெதுப்பகம்"
யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
(சி | 9733)

---

# நினைவு கூருகின்றோம்...

## 04. 07. 1994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் - உயிலங்குளம் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

யாழ்ப்பாணம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் காயமுற்று-யாழ் மருத்துவமனையில் மரணித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப்பெண். யாழ் கரவெட்டி, கரணவாய் மண்டான் பகுதியில் புளொட் குழுவினர் மேற்கொண்ட குண்டுவெடிப்பு பரிசீலனையின்போது கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான;
**வினோத்** (மாணிக்கம் நவசீலசேகரம்-முதலைக் குழி, கரணவாய்-கரவெட்டி)

1987-ம் ஆண்டு பொலிகண்டி-நவிண்டில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,
**கரன்** (கெஜானைமூர்த்தி சயந்தன் - உலகுடையப் பிள்ளையார்கோவில் ஒழுங்கை-வல்வெட்டித் துறை-யாழ்)

1988 ம் ஆண்டு மணலாறு-அளம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,
**2-ம் லெப். ஆனந்தி** (காமாட்சியம்மாள் தர்மரெட்டியார்-கணேசபுரம், வட்டக் கண்டல்-மன்னார்)

1989-ம் ஆண்டு வவுனியா-கொந்தக்காரன்குளம் பகுதியில் 21-6-89-ல் இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய,
**லெப். செந்தூரன்** (வடிவேலு லோகநாதன்-கள்ளப்பாடு-முல்லைத்தீவு)

கிளி-பன்னங்கண்டி, தமிழ்க்கலவன் பாடசாலை மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஆசிரியர்.

யாழ்-மாவிட்டபுரத்தில் தேசவிரோதசக்திகளால் அடித்துக் கொல்லப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்.

1990-ம் ஆண்டு கடலில் சிறிலங்கா கடற்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,
**லெப். ஜிம்றோன்** (- - - மட்டு)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,
**வரதன்** (வேலாயுதம் மதியழகன்-3-ம் கட்டை, தம்பலகமம்-திருமலை)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய,
**கந்தசாமி பாலா** (- - கள்ளிப்பிட்டி, கண்டாவளை-கிளிநொச்சி)

மன்னார்-முருங்கன் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,
**அமல்ராஜ்** (அன்ரன் நோபேட் (தம்பி) - வேளாங்கண்ணிவீதி, சாவற்காடு-மன்னார்)

அம்பாறை-கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 07 தமிழர்கள்

மணலாறு-கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த பாடசாலை தேவாலயம் ஆகியவற்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்

---

# நினைவுடன் 31 நாட்கள்



FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION
PRO VERITATE ET JUSTITIA

# பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

## தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள்

வாரநாள் வகுப்புக்கள: 11 - 07 - 91 திங்கட்கிழமையும்
வார இறுதி நாள் வகுப்புகள்: 09 - 07 - 91 சனிக்கிழமையும்
ஆரம்பமாகும்

1. **COMPUTER PROCESSING COURSES:**
   1) Programming in Basic Language and MS - DOS (Duration: 4Months)
   2) Word Processing and MS - DOS (Word Star Professional Rel 5. 0) (Duration: 4Months)
   3) LOTUS 1 - 2 - 3 (Spread Sheet Analysis) and MS - DOS (Duration: 3Months)
   4) dBASE III PLUS and MS - DOS (Duration: 4Months)
   Equipment Used: LASER XT/2, XT/3, 386 and Bitcom Computers (IBM Compatibles)
   (Theory and Practicals)
2. **CIVIL DRAUGHTSMANSHIP AND QUANTITY SURVEYING** (Duration: 6Months)
3. **CITY AND GUILDS OF LONDON EXAM** (94 / 95)
   QUANTITY SURVEYING (Part I & Part II) (Duration: 9Months)
4. **ENGLISH CLASSES** (Duration: 4Months)
5. **TOEFL** (Test of English as a Foreign Language) (Duration: 4Months)
6. **SHORT HAND AND TYPING** (English)
7. **GENERAL MOTOR MECHANISM**
   மோட்டார் வாகனம் திருத்துதல் (Duration: 6Months)
8. **ELECTRICAL WIRING** மின்சார இணைப்பு (Duration: 3Months)
9. **MOTOR REWINDING** மோட்டார் ரீவைண்டிங் (Duration: 4Months)
10. **GENERAL ELECTRICIAN** ஜெனரல் எலக்ரிஷன் (Duration: 6Months)

குறிப்பு: பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பங்குக் குருவானவரின் சிபார்சின் பேரில் கட்டணத்தில் சலுகை வழங்கப்படும்.


மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றீஷன் உயர் கல்வி நிறுவனம்
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR
Patrician Institute of Higher Studies
59, St. Patrick's Rd.
Jaffna.

(சி-9717)


## நினைவுடன் 31 நாட்கள்



**துணைப்படை வீரர் தூயவன்**
(சங்கரப்பிள்ளை இராமலிங்கம்)

மண்ணிலே: 22-4-1938
மண்ணுக்காக: 4 6 1994

தூய நினைவோடு.........
துணிந்த மனதோடு.
காவியப் பாதையிலே.........
கால்களைப் பதித்தாய்.
தேசத்தின் விடிவிற்கே.........
தேகத்தை ஈந்தாய்.
எங்களில் ஒருவனாய்.........
எழுச்சியுடன் வந்தாய்.
ஏது செய்கிறாய் என.........
எவரும் அறிந்திலர்.
ஓசை படாமலே........
சேதிகள் சொன்னாய்.
வேங்கையின் வித்தாக... .....
காலத்தில் பதிந்தாய்.

''உமாவாசம்''
அரசடி வீதி,
வட்டு தெற்கு.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்,
நண்பர்கள்,

(8706)

மணலாறு-கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இடம் பெயர்ந்தோர் தங்கியிருந்த பாடசாலை தேவாலயம் ஆகியவற்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

மன்னார் - தள்ளாடி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்,

காரைநகரில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தாய், மகன் ஆகிய இரு தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின் அவர்களது கண்காணிப்பிலுள்ள கந்தபுரம் பகுதியில் வீதிபோரத்தில் அழுகிய நிலையில் சடலங்களாகக் காணப்பட்ட 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு திருமலை - பன்குளம் வீதியில் சிறிலங்கா விமானப்படையினர் மீதான அதிரடித் தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய
**லெப்.மல்லன்- வீமன்** (சுந்தரலிங்கம் சசிக்குமார் சள்ளிமேடு, தப்பலகமம்- திருமலை)

புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,
**மருதன்** (அந்தோனிப்பிள்ளை றொபின் யோண்சன்- கண்ணாட்டி - வவுனியா)

புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,
**இளம்பிறை** (சின்னத்தம்பி விக்னேஸ்வரமூர்த்தி- முகாவில் - இயக்கச்சி)

ஊரியான் பாதையால் வரும் போது சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான மல்லாகத்தைச் சேர்ந்த தமிழ்மகன்

சுண்ணாகம் பகுதியில் நாகம்ஸ் திரையரங்கு முன்னால் விமானக்குண்டுவீச்சில் பலியான ஒரு தமிழ்மகன்

1993ஆம் ஆண்டு திருமலை - சிற்றூர் என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**கப்டன் பெரியதம்பி - சாண்டோ** (நேசராசா குமரவேல் - இலுப்பைக்குளம் - திருமலை)
**கங்கா-வளவன்** (நாகராசா ஜெயக்குமார் -கட்டைபறிச்சான் மூதூர் திருமலை)
**கலைக்கோன்- ரவி** (சீனித்தம்பி சந்திரன்- 58 ஆம் கட்டை-பாரதிபுரம் மூதூர்- திரு மலை)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9735)

# பொருளியல் /வர்த்தகம் A/L

## மக்கள் மயப்படுத்தல் (PEOPLISATiON)

சிறிலங்கா அரசாங்கம் தனக்குச் சொந்தமான உற்பத்தி வர்த்தக மற்றும் சேவைகளை வழங்குகின்ற அரசாங்க நிறுவனங்களை அண்மைக் காலமாக மக்கள்மயப்படுத்தல் என்ற நடவடிக்கைக்கு உட்படுத்தி வருகின்றது க பொ த. உயர்தர வகுப்பு மாணவர்களைப் பொறுத்தவரையில் மக்கள் மயப்படுத்தல் தொடர்பான வினாக்கள் கூடுதலாக இடம் பெறுகிறது. எனவே மக்கள் மயப்படுத்தல் என்றால் என்ன? மக்கள் மயப்படுத்தலுக்கான காரணங்கள் யாவை? மக்கள் மயப்படுத்தும் செயற்பாடு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது? மக்கள் மயப்படுத்தலின் விளைவுகள் என்ன என்பதை விளக்கும் நோக்குடன் இக்கட்டுரை அமைகின்றது.

### மக்கள் மயப்படுத்தல் என்பதன் விளக்கம்

மக்கள் மயப்படுத்நல் என்னும் சொல் தற்பொழுது பதவியிலிருக்கின்ற சிறிலங்கா அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும் அரசுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களின் உரிமையை ஏதோ ஒரு விதத்தில் தனியாருக்குக் கையளிக்கின்ற செயற்பாடே இச்சொல்லின் கருத்தாகும். எனவே உண்மையில் மக்கள் மயப்படுத்தல் என்பது தனியார் மயப்படுத்தலையே கருதுகின்றது அரசியல் காரணங்களுக்காக மக்களை பிழையான வழியில் திசை திருப்புவதற்கே அரசாங்கம் ஓர் ஏமாற்று வித்தைச் சொல்லாக தனியார் மயப்படுத்தலுக்கு மக்கள் மயப்படுத்தல் எனக் கூறிவருகின்றது.

தனியாருக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களை அரச உடமையாக்கும்போதுதான் உண்மையான மக்கள் மயப்படுத்தல் ஏற்படுகிறது. எனவே தேசிய மயப்படுத்தலுக்கு பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான சொல்லே மக்கள் மயப்படுத்தலாகும். ஆனால் அரசாங்கம் அதற்கு எதிராக தனியார் மயப்படுத்தலை மக்கள் மயப்படுத்தல் எனக் கூறி வருகின்றது. மக்கள் மயப்படுத்தல் என்று சொல்லிக் கொண்டு மக்களுக்கு சொந்தமான தொழில் நிறுவனங்களை வெளிநாட்டு கம்பனிகளுக்கோ அல்லது உள்ளூர் கம்பனிகளுக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கோ விற்று வருகின்றது எனவே மக்கள் மயப்படுத்தல் என்பதை பின்வருமாறு வரையறை செய்யலாம்

''அரசுக்குச் சொந்தமான உற்பத்தி, வர்த்தக மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமையைத் தனியாருக்கு மாற்றுதல்''

### மக்கள் மயப்படுத்தலை மேற்கொள்வதற்கான அவசியம்

முதலாளித்துவ பொருளாதார கொள்கைகளை கடைப்பிடிக்கின்ற நாடுகளில் கூட உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் அரசாங்கத்தின் ஈடுபாடு ஏதோ ஒரு வழியில் காணப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய இராச்சியம் போன்ற முதலாளித்துவ பொருளாதார முறையைக் கொண்டுள்ள நாடுகளில் கூட பொருளாதாரத்தை திட்டமிட்டு அதனை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் அரசதுறை தொழில் முயற்சிகள் நடைமுறையிலுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் சுதந்திரத்திற்கு முன்னரும், சுதந்திரத்திற்கு பின்னரும்அரசாங்கம் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளது சுதந்திரத்திற்கு முன்னர் இரண்டாவது உலக யுத்தகாலத்தில் கண்ணாடித் தொழிற்சாலை, ஓட்டுத் தொழிற்சாலை, மட்பாண்ட தொழிற்சாலை, அசற்றிக் அமிலத் தொழிற்சாலை போன்றவை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தொழில் முயற்சிகளாகும். சுதந்திரத்திற்குப் பின்னர் குறிப்பாக 1956 தொடக்கம் 1965 காலப் பகுதிகளிலும், 1970 தொடக்கம் 1977 காலப்பகுதிகளிலும் அரசதுறை தொழில் முயற்சிகள் மிக அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டன. இதற்கு பிரதான காரணமாக அமைந்தது அக்காலப்பகுதிகளில் சோசலிச கொள்கையை உடைய அரசு பதவியிலிருந்ததாகும் அத்துடன் எதிர்நோக்கப்பட்ட அந்நிய செலாவணி பிரச்சினை, வேலையின்மை ஆகியவை காரணமாக இறக்குமதியை தவிர்த்து அதற்குப் பிரதியீட்டுப் பொருட்களை உள்ளூரில் உற்பத்தி செய்வதற்கும், நாட்டு வளங்களைத் திட்டமிட்டு பொருளாதார விருத்திக்குப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையும் ஆகும்.

அரசாங்கம் உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் ஈடுபடக்கூடிய முறையில் பின்வரும் சட்டங்கள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன.

1. 1957-ம் ஆண்டின் 49-ம் இலக்க அரச கைத் தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டம்.
2. 1970-ம் ஆண்டின் 33-ம் இலக்க அரச வர்த்தக கூட்டுத்தாபனங்கள் சட்டம்.
3. 1972-ம் ஆண்டின் 11-ம் இலக்க அரச கமத் தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டம்
4. 1979-ம் ஆண்டின் 22-ம் இலக்க காப்புறுதி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

மேற்கூறப்பட்ட சட்டங்கள் மிக இலகுவான முறையில் கூட்டிணைத்தல் கட்டளையொன்றை வெளியிடுவதன் மூலம் கூட்டுத்தாபனம் ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கு உரிய அமைச்சருக்கு இடமளித்தது. இதைவிட தனிப்பட்டவர்களுக்கும் சொந்தமான தொழில் நிறுவனங்களைக் கூட அரசாங்கம் சுவீகரித்து தொழில் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடிய முறையில் 1971ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க வியாபார சுவீகரிப்புச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு சுமார் 25ற்கும் அதிகமான தனியார் துறை தொழில் நிறுவனங்கள் அரசுடமையாக்கப்பட்டு அவற்றை அரசாங்கம் நடாத்தி வந்தது. இவ்வாறு இலங்கை பொருளாதாரத்தில் அரசதுறை நிறுவனங்களின் பங்களிப்பு மிகக் கூடுதலாக இருந்தது. இத்தகைய நிலையில் எக்காரணங்களுக்காக அரசாங்கம் தனது தொழில் நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தலென கூறிக்கொண்டு தனியார் மயப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதென்பதைப் பார்ப்போம்.

முதலாவதாக 1977இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை தனது பொருளாதார சித்தாந்தமாக கொண்டு தனியார் துறையினருக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது. எனினும் ஆரம்பத்தில் அரச தொழிற்துறை நிறுவனங்களை முற்றாகத் தனியாருக்கு விற்றுவிடாமல் வெளிநாட்டு கம்பனிகளை இலங்கையில் செயற்பட அனுமதித்தல், தனியார் துறையினர் தொழில்களில் ஈடுபடுவதில் காணப்பட்ட தடைகளை நீக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு தனியார் துறையினருக்கு ஊக்கமளித்து வந்தது. அத்துடன் அரச தொழில் நிறுவனங்களில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி அவற்றைச் சிறந்த முறையில் இயங்கச் செய்யும் நோக்குடன் பொது முயற்சிகள் குழுவை ஏற்படுத்தியும், (COPE) ஒருசில கூட்டுத்தாபனங்களை ஒன்றிணைத்தும் திணைக்களங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொழில் முயற்சிகளை கூட்டுத்தாபனங்களாக மாற்றியும் ஆட்குறைப்பு செய்தும் பல்வேறு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ்வாறு ஆரம்பத்தில் ஐக்கிய தேசிய கட்சி அரசு கூட அரசதுறை தொழில் நிறுவனங்களை தனியார் மயப்படுத்தவோ அல்லது கலைக்கவோ தயங்கியது. இதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்;

1. அரசாங்கம் தனது அதிகாரத்தை வெளிப்படுத்துவதற்கு அரசதுறை நிறுவனங்கள் குறிப்பாக கூட்டுத்தாபனங்கள் ஒரு கருவியாகப் பயன்பட்டமை.
2. அரசாங்க ஆதரவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கு அரச கூட்டுத்தாபனங்கள் வாய்ப்பாக அமைந்தமை.
3. அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள அரசசார்புடைய தொழிற்சங்கங்கள் தமது அதிகாரத்தை வெளிப்படுத்தக்கூடியதாக இருந்தமை
4. அரச கூட்டுத்தாபனங்களில் பிரதான பதவி வகுத்த நிர்வாக உத்தியோகத்தர்கள் தமது செல்வாக்கை வெளிப்படுத்துவதற்கும் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் கூட்டுத்தாபனங்கள் வாய்ப்பாக இருந்தமையால் அவற்றிலுள்ள குறைபாடுகளை வெளிப்படுத்தத் தவறியமை.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் ஐக்கிய தேசிய கட்சி அரசு பதவிக்கு வந்தும் சுமார் பத்து வருட காலங்களிற்கு அரசதுறை நிறுவனங்களை பூரணமான தனியார் மயப்படுத்தலுக்கு உட்படுத்தவில்லை. எனினும் பின்வரும் காரணங்களினால் அரசதுறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை 1989இல் இருந்து பூரணமாக செயற்படுத்த ஆரம்பித்தது.

1. அரசாங்கத்தின் பாதிட்டில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான செலவினங்கள் முக்கிய பங்கினை வகித்தது. இதற்கான காரணம் அநேக கூட்டுத்தாபனங்கள் தமது செலவினங்களுக்குக் கூட போதிய வருவாயை ஈட்டவில்லை. அக்கூட்டுத்தாபனங்களைத் தொடர்ந்து இயங்கச் செய்வதற்கு அரசாங்கம் கூடுதலான நிதியை செலவிட வேண்டி இருந்தது. இதனால் அரசாங்கத்தின் கடன்சுமை மேலும் அதிகரித்தது. இது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவை பல்வேறு ஆலோசனைகளையும், நிபந்தனைகளையும் அரசுக்கு கூறியதுடன் அழுத்தத்தையும் ஏற்படுத்தியது. இதனால் அரச கூட்டுத்தாபனங்களை மக்கள் மயப்படுத்தல் என்ற போர்வையில் தனியார் மயப்படுத்தத் தொடங்கியது.

2. அரசதுறை நிறுவனங்களில் காணப்பட்ட திறமையற்ற நிர்வாகத்தை நீக்குவதும், தனியார் மயப்படுத்தலுக்குக் கூறப்பட்ட காரணங்களில் ஒன்றாகும். அரசதுறை நிறுவனங்களில் குறிப்பாக உற்பத்தி. வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களில் பதவி வகித்த மேல்மட்ட முகாமை உத்தியோகத்தர்கள் சாதாரண, அரசாங்க நிர்வாக உத்தியோகத்தர்களாக இருந்ததுடன் அவர்கள் தொழில் ரீதியான கல்வித் தகைமைகளையும் பெற்றிருக்கவில்லை. அத்துடன் அவர்கள் அரசாங்க ஆதரவாளர்களாகவும் காணப்பட்டனர். இதனால் அவர்களது ஊழல் நடவடிக்கைகள் பல மூடி மறைக்கப்பட்டன. இவை அனைத்தும் அரசதுறை நிறுவனங்களின் நிர்வாகத்தை சீரழியச் செய்தது. அநேக அரசதுறைதொழில்நிறுவனங்களில் ஊழியர்கள்அளவுக்கதிமாகக் காணப்பட்டனர். எனவே ஆட்குறைப்பு நடவடிக்கைகளுக்கும் தனியார் மயப்படுத்தல் செயற்பாடு ஏற்றதாகக் காணப்பட்டது.

3. அநேக அரசதுறை நிறுவனங்கள் பொதுமக்களுக்கான சேவையை சிறந்த முறையில் வழங்க முடியவில்லை. மேலும் பொதுமக்கள் தரங்குறைந்த பொருள்களையும், சேவைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டி இருந்ததுடன் அவற்றை உரிய காலத்திலும் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. எனவே தரமான பொருள்களையும், சேவையையும் பொதுமக்களுக்கு வழங்குதல் மக்கள் மயப்படுத்துதலின் நோக்கங்களில் ஒன்றாக அமைந்தது.

4. அரசாங்கம் முக்கியமான தொழில்களைப் பொறுத்த வரையில் தனியுரிமையை வகித்து வந்தது. உதாரணமாக காப்புறுதித் தொழில், பயணிகளுக்கான பஸ்சேவை ஆகியவற்றைக் கூறலாம். இத்தகைய தொழில்களில் போட்டியை ஏற்படுத்துவதற்கு மக்கள் மயப்படுத்தல் ஏற்றதாகக் காணப்பட்டது.

5. அரசதுறை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணியை, அந்நிய முதலீடுகள் மூலம் வரவழைக்கக் கூடிய வாய்ப்பு காணப்பட்டமை.

6. இலங்கையில் மூலதனச் சந்தையை அபிவிருத்தியடையச் செய்வதும் மக்கள் மயப்படுத்தலின் நோக்கமாக அமைந்தது,

7. சிறந்த நிருவாகத்தை ஏற்படுத்துவதன் மூலம் கூடுதலான வருவாயைப் பெறுவதும் அதன் மூலமாக கூடுதலான வரியைப் பெற்றுக்கொள்வதும்

8. மக்கள்மயப்படுத்துவதன் மூலம் அரசாங்கச் சொத்துக்களை விற்று அதன் மூலமாக அரச செலவினங்களுக்கான வருவாயைப் பெற்றுக் கொள்ளுதல்

9. அரச உடமையாக்கப்பட்ட தனியார் துறை நிறுவனங்களை மக்கள் மயப்படுத்துவதன் மூலம் மீண்டும் அவற்றை தனியாருக்கு ஒப்படைத்து அரசியல் பழிவாங்கலால் ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்தல்.

10. சந்தைப்பொறிமுறை மூலமாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

(தொடரும்)





க. கனகரத்தினம்
B. Com (Spl); Dip in Accy; MAAT( SL);
AMILog (U. K)
சிரேஷ்ட உதவி நிதியாளர்
யாழ். பல்கலைக்கழகம்

னர் இரண்டாவது உலக யுத்தகாலத்தில் கண்ணாடித் தொழிற்சாலை, ஓட்டுத் தொழிற்சாலை, மட்பாண்ட தொழிற்சாலை, அசற்றிக் அமிலத் தொழிற்

அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

(தொடரும்)

# தாவரவியல்

A/L

## சூழலியல்- ஒரு பரீட்சை நோக்கு

கடந்த சில வருடங்களில் சூழலியல் தொடர்பான வினாக்களுக்கு பெரும்பாலான மாணவர்கள் முழுமையான புள்ளிகளைப் பெறத்தவறியுள்ளார்கள் என்பதனை அண்மைக்காலங்களில் வெளியிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதற்கு பல காரணங்கள் உள்ளன. இவற்றுள் பிரதானமான ஒன்று. சூழலியலானது தாவரவியல் பாடத்திட்டத்தின் இறுதி அலகாக அமைந்திருப்பதால் பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சூழலியல் பற்றிய தெளிவான, ஆழமான அறிவைப்பெற முயற்சிப்பதில்லை. பதிலாக ஏற்கனவே படித்த பகுதிகளை மாத்திரம் மீட்டல் செய்வதிலும், மாணவர்கள் தாமாகவே படிப்பதற்கான விடுமுறையை முன்கூட்டியே பெற்றுக்கொள்வதிலும் கவனம் செலுத்துகின்றனர். இக்காரணங்களால் கணிசமான புள்ளிகளைப் பெற்றுத்தரக்கூடிய சூழலியல் பகுதி மாணவர்களுக்கு கடினமானதாக தோற்றமளிக்கின்றது.

93 **AUG**.பரீட்சையில் பல்தேர்வு வினாக்களிலும் கட்டுரை வினாக்களிலும், அதிக எண்ணிக்கையான சூழலியல் தொடர்புள்ள வினாக்கள் கேட்கப்பட்டிருந்தன. திறமைமிக்க சில மாணவர்கள் கூட ஏனைய அலகுகளிலுள்ள வினாக்களிற்கு சரியாக விடையளித்தும் பரீட்சையில் 'A' தரத்தை பெறமுடியாமல் '**B**' தரத்தையே பெறுபேறாக பெற்றுக்கொண்டமைக்குரிய காரணத்தை வினவியபோது இறுதிநேரங்களில் கற்பிக்கப்பட்ட சூழலியல் தொடர்பான விடயங்களை தாம் அறிந்துகொள்ளாமையும் ஒரு காரணம் என கருதுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட, விடயங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடியது என்னவெனில் பரீட்சைப் பெறுபேறுகளைக்கூட எல்லைப்படுத்தும் ஒரு பகுதியாக சூழலியல் அமைந்துள்ளது. ஆதலால் எதிர்காலத்தில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் சூழலியல் தொடர்பான தெளிவான அறிவை பெற்றிருத்தல் இன்றியமையாததாகும்.

சூழலியலானது. க. பொ. த. உயர்தர தாவரவியல் பாடத்திட்டத்தில் மேலும் உப அலகுகளாக வகுக்கப்பட்டு அவற்றில் தனித்தனியாக அல்லது பல உபஅலகுகளைத் தொகுத்து வினாக்களாக்கப் பட்டுள்ளன. இவை எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதனையும், இலகுவாக விடையளிக்கக்கூடிய வழிகாட்டல் முறைகளையும் ஆராய்வோம்.

மண்இரசாயனம் (**Soil Chemistry**) எனும் உப அலகில் மிக இலகுவானதும், கடினமானதுமான வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக 1991 **AUG**-ல் கேட்கப்பட்ட பல்தேர்வு வினாவில்

★ நிலத்தை உழுவதால் அல்லது பண்படுத்துவதால் ஏற்படும் விளைவு அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

1. காற்றூட்டலின் முன்னேற்றம்
2. களை கட்டுப்படுத்தப்படல்
3. மண் அரித்தலின் அதிகரிப்பு
4. மண் இழையமைப்பின் முன்னேற்றம்
5. நைதரசன் நாட்டும் பற்றீரியாவின் தொழிற்பாட்டில் குறைவு

மேற்தரப்பட்ட ஐந்து விடைகளிலும் மிகப்பொருத்தமானது என நான்காவது விடையை இலகுவாக தேர்ந்தெடுக்க முடியும். இதேவேளையில் 1988**AUG**-ல் மண் தொடர்பாக கேட்கப்பட்ட வினா எல்லா மாணவர்களுக்கும் இலகுவானதாக காணப்படவில்லை. ஆதலால் இவ்வாறான பாட விடயங்களை ஆழமாக அறிந்திருத்தல் வேண்டும். 1988 **AUG**-ல் தேர்வு வினாவை அவதானிப்போம்.

★ மண்மாதிரியொன்றின் துணிக்கைப் பகுப்பாய்வொன்றின் போது பின்வரும் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றன.

| துணிக்கைகளின் பருமன்(mm) | | நிறைக்கு ஏற்ப சதவீதம் |
|---|---|---|
| > 2000 | — | 10 |
| 200 - 2000 | — | 01 |
| 20 - 200 | — | 11 |
| 02 - 20 | — | 28 |
| <02 | — | 60 |

மேற்படி தரவுகளுக்கு ஏற்ப இம் மண்

1. இருவாட்டி மண்ணாக இருக்கக் கூடும்
2. களிமண்ணாக இருக்கக் கூடும்
3. கரையோர மணல் மண்ணாக இருக்கக் கூடும்
4. மணற்பரல் மண்ணாக இருக்கக்கூடும்.
5. உக்கல் மண்ணாக இருக்கக் கூடும்

இவ்வினாவானது நேரடியாக விடையளிக்க கூடிய வகையில் அமையவில்லை. பதிலாக இரு விடயங்களை கவனத்திற் கொள்ளவேண்டியுள்ளது.

**A**) துணிக்கைகளின் பருமனுக்கு பொருத்தமான இழையமைப்புக்குரிய மண்ணின் கூறு தெரிந்திருத்தல்

உதாரணமாக > 2000 m U— சிறுகற்களாகவும்
< 02 mU — களியாகவும் காணப்படுதல்.

**B**) பிரதான மண்வகைகளில் இக்கூறுகள் காணப்படும் மிகக்குறைந்த சதவீதத்தை அறிந்திருத்தல் உதாரணமாக களிமண்ணில் ஆகக் குறைந்தது 28%மாவது களிக்கூறு காணப்படுதல் அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட இரு விடயங்களையும் கவனத்திற் கொள்ளும் போது இவ்வினாக்குரிய விடை இரண்டாவதாக அமையும். (களிமண்ணாக இருக்கக் கூடும்)

இவை தவிர மண்ணீர். மண்வளி என்பவற்றை உள்ளடக்கியதாகவும் சிலவினாக்கள் கேட்கப்படுகின்றன. உதாரணத்திற்கு 1988 **AUG**-ல் உள்ள பிறிதொரு பல்தேர்வு வினாவை அவதானிப்போம்.

★ பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் மண் அதன் புலங்கொள்ளளவில் காணப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது?

1. மழை பொழிந்து ஓய்ந்தவுடன்
2. அதில், மயிர்த்துளை நீரும், பருகு நீரும் மாத்திரம் உயரளவில் காணப்படும் பொழுது

**சுப்பிரமணியம் செல்வநேசன்**
ஆசிரியர், சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

3. அதில் மயிர்த்துளை, நீரும், ஈர்ப்பு நீரும் உயரளவில் காணப்படும் போது
4. அம்மண்ணில் வளரும் பயிர்கள் வாட ஆரம்பிக்கும் போது
5. அம்மண்ணை வளியில் உலர்த்திய பின்னர்

இங்கு புலங்கொள்ளளவு அல்லது மண்டலக் கொள்ளளவுஎன்பது குறிப்பிட்ட மண்மாதிரியில் புவியீர்ப்பு நீர் வடிந்தோடிய பின்னுள்ள மயிர்த்துளை நீரையும், பருகுநீரையும் குறிக்கும்.

மண்இரசாயனம் தொடர்பாக மேலும் வானிலையாலழிதல், மண்உற்பத்தி, மண்ணின் இயல்புகள் என்பவற்றை கருவாகக்கொண்டும் பிரதானமாக மண்வளமாக்கலை அடிப்படையாக வைத்தும் பல வினாக்கள்தயாரிக்கப்படுகின்றன. வளமாக்கலில்பண்படுத்தல், பயிர் சுழற்சி, மூடுபயிர் வளர்த்தல், உக்கல்/சேதனப்பசளையிடுதல் என்பவற்றை மையமாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன. முக்கியமாக வளமாக்கலின் தத்துவங்களே வினாவாக்கப் பட்டுள்ளன. உதாரணமாக 1991 **AUG** வினாவை அவதானிப்போம்:

★ சுழல்முறைப் பயிர்ச்செய்கை தொடர்பாகப் பின்வருவனவற்றுள் தவறானது எது?

(1) அது மண்ணிலுள்ள கனிப்பொருள் மூலங்கள் அற்றுப்போகும் வீதத்தைக் குறைக்கும்.

(2) விவசாயி ஆண்டுக்கு 2 அல்லது 3 வகைப் பயிர்களைப்பெற அது இடமளிக்கும்.

(3) அது மண்ணரிப்பைத் தடுக்கும்

(4) ஒட்டுண்ணிகளால் ஏற்படும் சேதத்தை அது குறைக்கும்

(5) பருவத்துக்குரிய மழைவீழ்ச்சியுள்ள பிரதேசங்களுக்கு அது பொருத்தம் குறைந்ததாகும்.

மேலுள்ள வினாவிற்கு சுழற்சிமுறை பயிரிடுதல் பற்றிய பூரண அறிவு இருத்தலுடன் அவற்றினால் ஏற்படுகின்ற அனுகூலங்கள், பிரதிகூலங்கள் என்பவற்றையும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. இவை தவிர பருவத்துக்குரிய மழைவீழ்ச்சி தாழ்நாட்டு உலர் வலயங்களிலேயே காணப்படுகிறது என்பதனை தெரிந்து கொண்டிருப்பதுடன், இவ்வலயத்தில் சுழற்சிமுறைப்பயிர்ச்செய்கை பொருத்தமானது என்பதனையும் அறிந்திருக்க வேண்டும். ஆகவே இவ்வினாவிற்கு பொருத்தமான விடை ஐந்தாவது ஆகும். இவ்வாறான பல்தேர்வு வினாக்கள் தவிர 93**AUG**, 92 **AUG**, 91 **AUG** (92**SP**.) போன்ற வருடங்களில் மண்உற்பத்தி, வளமாக்கல், மண்ணின் பண்புகள் என்பவற்றை மையமாகக் கொண்டு கட்டுரை வினாக்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

சூழலியலில் பிறிதொரு உபஅலகான காலநிலையியல் (**Climatology**) தொடர்பாகவும் அண்மைக் காலங்களில் நன்கு பிரபல்யமான வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன. காலநிலையியலில் இலங்கையின் பிரதான காலநிலை வலயங்களை தெரிந்து கொள்வதும் அவற்றினது மழைவீழ்ச்சி, வெப்பநிலை, பரம்பல்,இயற்கைத்தாவரவர்க்கங்களினதுதன்மை என்பவற்றைஅறிந்திருந்தாலும்போதுமானதாகும். இவற்றை அடிப்படையாக வைத்தே பல்தேர்வு, அமைப்புக் கட்டுரை, கட்டுரை வினாக்கள் கேட்கப்படுகின்றன. பிரதானமான ஆறு காலநிலை வலயங்களையும் பின்வரும் அட்டவணைக்குட்படுத்துவதன் மூலம் விடையளித்தலை இலகுவாக்கிக் கொள்ளலாம்.

| காலநிலை வலயம் | மழை வீழ்ச்சி | வெப்ப நிலை | பிரதேசப் பரம்பல் | இயற்கைத் தா. வர்க். |
|---|---|---|---|---|
| 1. **LCWZ** | — — | — — | — — | — — |
| 2. **LCDZ** | — — | — — | — — | — — |
| 3. **LCAZ** | — — | — — | — — | — — |
| 4. **IZ** | — — | — — | — — | — — |
| 5. **UCWZ** | — — | — — | — — | — — |
| 6. **UCDZ** | — — | — — | — — | — — |

தாவரவியல் பாடத்திட்டத்தை பொறுத்தவரையில் மேற்குறிப்பிட்ட காலநிலை வலயங்களுக்குரிய விடயங்களைப் பற்றிய தேடுதல் மாணவர்களின் தன்னாக்கத்தையும், சுயசிந்தனையையும் அதிகரிக்கும் இங்கு.

**LCWZ** - தாழ்நாட்டு ஈரவலயம்
**LCDZ** - தாழ்நாட்டு உலர்வலயம் என்பவற்றை குறிப்பதாகும். இவைதவிர காலநிலையியல் தொடர்பாக இலங்கைப்படமொன்றில் மேற்குறிப்பிட்ட வலயங்களை இனங்கண்டு கொள்ளவும் அவ்வலயங்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

# அலங்காரத் திருவிழாச் சிறப்பிதழ்


அலங்காரத் திருவிழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

**பிரபா போட்டோ**

108, அர்ச்சுனா வீதி,
(ஸ்ரான்லி வீதி, ) யாழ்ப்பாணம்.


''கிரியா கலாமணி''

## சிவஸ்ரீ ச. தி. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

எமது இந்து ஆலயங்களில் நித்திய பூசை, நித்திய உற்சவம், மாத உற்சவம், மகோற்சவம், அலங்கார உற்சவம் என வேதாகமங்களில் கூறப்பட்டதற்கமைய மிகச்சிறப்புற எமது ஆலயத்தில் ஆனி மாத மூல நட்சத்திரத்தில் ஆரம்பமாகி, 12 தினங்கள் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சமேத வைரவப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகளுடன் மிகச் சிறப்பாய் உற்சவம் கண்டு இன்று திரு மஞ்சத்தில் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இத் தலத்தின் தல விருட்சமாக அரச மரம் விளங்குகிறது. அதன் கீழ் அமர்ந்து வரும் அடியார்களின் துயர் தீர்த்து என்றென்றும் அருள் பாலிப்பாராக''.

## ஆலய வளர்ச்சியும் திருப்பணித் தொடர்ச்சியும்

அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பழமை வாய்ந்த இவ்வாலயம் ஆரம்பத்தில் ஈச்சமோட்டையில் வசித்து வந்த செல்லத்துரை சேவியர் அவர்கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர், இவர் ஒரு வைரவர் சூலத்தை வைத்து வழிபட்டு அக்காலத்தில் சாமியார் என்று மதிக்கப்படும் பூநகரி செல்லையா என்பவரும். அந்த வைரவப் பெருமானுக்கு விளக்கேற்றல், பொங்கல்கள், முதலிய கிரியைகளை செய்து வழிபட்டுவந்தார்கள். இதை அறிந்து அப்பகுதி மக்கள் அனைவரும் இவ் வழிபாடுகளில் கலந்து பக்தி நெறியோடு வழிபட்டு வந்தார்கள்.

இவ்வாலயம் முக்கால் பரப்பு விஸ்தீரணமுள்ள காணியில் சிறு ஓலைக்கொட்டிலாக அமைந்திருந்தது. 1934 ம் ஆண்டு மணி ஐயா அவர்கள் ஆலயப் பூசகராக நியமிக்கப்பட்டார். இவர் நித்திய நைமித்திய கருமங்களை மிகவும் சிறப்பாக ஆற்றிவந்தார். இவருடைய காலத்தில் திருவெம்பா பூசை ஆரம்பிக்கப்பட்டு திருவாதவூரடிகள் புராணத்தை புலவர் சபாபதி அவர்களால் பொருள் சொல்லி தேவார பாராயணங்கள் சிறப்பாக நடந்தன.

1946-ம் ஆண்டு தம்பிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை அவர்களால் பராமரித்து வந்த ஆலயத்தை ஐந்து பேர் கொண்ட (பஞ்சாயத்து) சபையிடம் கையளித்தார். அதன் சபைக்கு முதல் தலைவராக திரு. வே. தம்பு அவர்

மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பின்பு 1971-ம் ஆண்டு ஆலயத்தின் தெற்குப் பகுதியிலுள்ள காணியும், 1974 ம் ஆண்டு மேற்குப் பக்கமாகவுள்ள காணியும், 1976-ம் ஆண்டு தெற்குப்பக்கமுள்ள மிகுதிக் காணியும் இவருடைய காலத்தில் வாங்கப்பட்டது.

1981 - 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த நிர்வாக சபைத் தலைவர் திரு. தம்பிஐயா - தியாகராஜா அவர்களுடைய நிர்வாக சபையினரும் விஸ்தீரணமான இக்காணியில் ஆகம விதிப்படி ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர். இத் திருப்பணியை நிறைவேற்றும் பொறுப்பை, திரு. மு. பத்மநாதன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



திருப்பணியை ஆரம்பிக்கும் போது பிரம்மஸ்ரீ வெ. சுப்பிரமணிய சர்மா அவர்களின் தலைமையில் திரு. நா. முத்துச்சாமி அவர்க

னும் மிகவும் சிறப்பாகச் செய்து முடித்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1987-ம் ஆண்டு காலப்பகுதியில் தம்பையா தியாகராசா அவர்களின் தலைமையில் இருந்த நிர்வாக சபையினரும் ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக உள்ள காணியும் மிகவும் சிரமத்தின் மத்தியில் வாங்கப்பட்டது.

1988-89 ம் ஆண்டு காலப் பகுதியில் திரு. தி. ஜெகநாதன் அவர்களின் தலைமையில் இருந்த நிர்வாக சபையினரால் ஆலய முன் மண்டபம் அமைக்கப்பட்டது.

1991 - 92 ம் ஆண்டுகாலப் பகுதியில் திரு து. குலசேகரம் அவர்களின் தலைமையில் இருந்த நிர்வாக சபையினரால் வெளி வீதி பவனி வருவதற்கு திருமஞ்சத் திருப்பணியை நிறைவு செய்து மிகவும் சிறப்பாக வெள்ளோட்டமும் நடைபெற்றது.

பின்பு 1994-ம் ஆண்டு பொறுப்பேற்றிருக்கும் எனது தலைமையைக் கொண்ட நிர்வாகசபை ஆலயத்தின் வடக்குப்பக்கமாக இருக்கும் காணியை வாங்குவதற்கு ஒரு திருப்பணிச்சபையை அமைத்திருக்கின்றது. இத்திருப்பணிச் சபையில் பொதுச்சபையால் ஆறு (06) பேரும் நிர்வாக சபையினர் (09) ஒன்பது பேரும் திருப்பணிச் சபையில் அடங்குவார்கள். இப் பாரிய பணியை செய்து முடிப்பதற்கு பொது மக்களாகிய உங்களிடம் ஒத்துழைப்பும் அளவற்ற ஆதரவையும் தந்து ஆலய


**செல்லையா விற்பனை அகம்**

செல்லா சன்ஸ் சேல்ஸ் சென்ரர்
118, 198, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


எவர் சில்வர், பிளாஸ்ரிக் அலுமீனிய
அன்பளிப்பு பொருட்களை
தெரிவு செய்து பெற்றிட நாடுங்கள்

**உதயன் வோச் வேக்ஸ்**

இல. 100, பருத்தித்துறை வீதி,
(ஆரியகுளம் சந்தி)
யாழ்ப்பாணம்.

**பி. ஐ. பர்னான்டோ**

542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



ஸ்ரீ ஞானவைரவர் அருள்பெற
வாழ்த்துகிறோம்

உங்கள் நாளாந்த வீட்டுப்பாவனைப் பொருட்களையும் விசேட வைபவங்களுக்கு வேண்டிய பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவுவிலையில் வாங்க நாடவேண்டிய இடம்

**நியூ ஸ்ரீ கண்ணன்**

25, நவீன சந்தை,
திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்.

**ஜெகன் வர்த்தக நிலையம்**
**எரிபொருள் வாணிபம்**

பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**நதியா ஜுவல்லறி**

(ஸ்ரான்லி விதிச் சந்தி)
2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஜெயா அழகு மாடம்**

177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



பல் கட்டுபவர்   கண்பரிசோதகர்

தணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

கணேசன் பட்டுச்சோலை
201, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வந்த ஆலயத்தை இந்து போ கொண்ட (பஞ்சாயத்து) சபையிடம் கையளித்தார். அதன் சபைக்கு முதல் தலைவராக திரு. வே. தம்பு அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்பு 1965ம் ஆண்டு நிர்வாக சபைத் தலைவர் திரு. சு. சிவராசா அவர்களின் காலத்தில் மணிக்கூட்டுக் கோபுரம் திருப்பணி வேலை நிறைவேற்றப்பட்டன.

1969-ம் ஆண்டு திரு. சி. இராசசூரியர் தலைமைத்துவத்தில் ஆலயம் திருத்தியமைக்கப்பட்டு கும்பாபிசேகம் கும் போது பிரம்மஸ்ரீ வெ. சுப்பிரமணிய சர்மா அவர்களின் தலைமையில் திரு. நா. முத்துச்சாமி அவர்களால் அத்திவாரத்திற்கு நாட்கல் வைத்து ஆரம்பிக்கப்பட்டது. இத்திருப்பணிக்கு பொது மக்களின் ஒத்துழைப்புடனும் நிர்வாகசபையின் உதவியுடனும் ஒத்தாசையு-

பணியை செய்து முடிப்பதற்கு பொது மக்களாகிய உங்களிடம் ஒத்துழைப்பும் அளவற்ற ஆதரவையும் தந்து ஆலய வீதியை பெரிதாக்கி உற்சவ காலங்களில் வீதிகளை அலங்கரித்து எம்பெருமான் வீதி வலம் வருவதற்கு ஆவன செய்வதற்கு பணிவன்புடன் வேண்டி நிற்கின்றேன்.

**க. பாலசுப்பிரமணியம்**
ஆலய பரிபாலன சபைத் தலைவர்

"தமிழீழ மக்களின் வாழ்வு வளம்பெற
ஞானவைரவரின் நல்லருளை வேண்டுகிறோம்"
புறோமோட்டோஸ் எஞ்ஜினியறிங்
கொம்பனி லிமிட்டெட்
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

1994 ஆண்டுக்கான மாநகர சபையின் சுகாதாரமானதென
முதற்பரிசு பெற்ற ஸ்தாபனம்

செந்தாமரை

செந்தாமரை குளிர் தடாகம்

177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
160, நவீனசந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்
ரேகா அழகு மாடம்
24, 48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

சிறி நதியா
நகை மாளிகை
2G, ஸ்ரான்லி வீதி,
(அர்ச்சுனா வீதி)
யாழ்ப்பாணம்.

மொறாயஸ்
50, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

விழாச் சிறப்புற வாழ்த்தி, வணங்கி,
நிற்போம்.
மஞ்சத் திருவிழா உபயகாரரும்,
திரு. செல்லையா குடும்பத்தினருமாகிய
திரு. ச. கந்தசாமி குடும்பத்தினர்
சொகுசு பஸ் சேவை,
இல 7, ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளி
திருமதி கு. அருணா குடும்பத்தினர் திரு. செ. சுந்தர் குடும்பத்தினர் திரு. செ. தனம் குடும்பத்தினர் திரு- செ. சுரேஸ்

(சி-9740)

**சிந்தனைக்கு..**

அவமானம் அறியாத இடத்தில்
மானம் இருக்க மாட்டாது.
- ஆபிரிக்கப் பழமொழி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 04-07-94
தொலைபேசி:
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## கப்பல் பயணமும் அடிமை வாழ்வும்

தேனாறும், பாலாறும் ஓடுகின்றது என்ற எண்ணத்திலேயே தமிழக மக்கள் கடந்த நூற்றாண்டில் இலங்கை நோக்கிப் புறப்பட்டார்கள். பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் கொடுத்த போலியான நம்பிக்கைகள், வாக்குறுதிகள் அவர்களை ஒன்றரை நூற்றாண்டிற்கும் மேலாக அடிமை வாழ்விற்கு வித்திட்டது.

பசியிலும், பஞ்சத்திலும் சிக்குண்டு தவித்த இம் மக்கள் தமிழகத்தில் இருந்து கப்பல்கள் மூலமாக கொண்டு வரப்பட்டு மன்னார் - வன்னிக்கரைகளில் இறக்கப்பட்டனர். இதில் கணிசமான தொகையினர், தேனாறு, பாலாறு என்பனவற்றை மட்டுமல்ல பசியாற உணவும், நீரும் கிடைக்கும் முன்னரே வன்னிக்காடுகளில் நோய்க்குப் பலியாகிவிட்டனர்.

இவர்களைத் தவிர வேறும் ஒரு தொகுதியினரும், பெரும்பாலும் சிறுகுழுக்களாகவும், தனி நபர்களாகவும் தமிழகத்தில் இருந்து புறப்பட்டவர்கள், இடைநடுவில் பெரும் துயருக்குள்ளானார்கள். வடபகுதித்தீவுகளிலும், கடலின் நடுவிலுள்ள மணற்றிடல்களிலும் இவர்கள் இறக்கிவிடப்பட்டார்கள். இவர்கள் இறக்கிவிடப்பட்ட தீவுகள் சில குடிப்பதற்கு நன்னீர் கூட அற்ற பகுதிகளாகும். சில கடல் வற்றின்போது மட்டும் வெளித்தெரியும் மணற்றிடர்கள் ஆகும்.

இவ்வாறாக தேனாறும், பாலாறும் ஓடும் பூமியைக் காணப் புறப்பட்ட மக்கள் பாதிவழியிலேயே பலரைப் பறிகொடுத்தனர். இவர்களின் இத் துயரம் நிறைந்த இவ்வாழ்க்கை வரலாற்றை இன்று இலங்கைத் தமிழரின் செயற்பாடுகள் சில நினைவூட்டுவதாக உள்ளன.

இவ்வாறானதொரு நிகழ்ச்சியாகவே டென்மார்க்கின் தீவொன்றில் 90 இலங்கைத் தமிழர் அண்மையில்,

# அரசியல்வாதிகளிடம் ஆயுதங்களை திருப்பிப்பெற அரசு நடவடிக்கை

(கொழும்பு)

ஜே. வி. பியினரின் நடவடிக்கைகள் மற்றும் வன்செயல்கள் பரவியிருந்த காலத்தில் அரசியல்வாதிகள் மற்றும் குழுக்களின் பாதுகாப்பிற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் இன்னும் மீளப் பெறப்படாதவற்றை பொறுப்பேற்க பொலிஸ் திணைக்களம் விரைவில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் இவ் ஆயுதங்கள் அனைத்தையும் மீளப்பெறும்படி பாதுகாப்பு அமைச்சு பொலிஸ் திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

1988-ம் ஆண்டுமுதல்90-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் அரசாங்க, மற்றும் எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் அரசியல் வாதிகளின் தற் பாதுகாப்பிற்காக இந்த துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ரீ 56 ரகங்கள் ஏ. கே. 47, ரகதுப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், எல். எம். ஜி. ரகத்துப்பாக்கி கள் எனப் பல இவ்வாறு வழங்கப்பட்டது தெரிந்ததே.

இந்த ஆயுதங்கள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டு விட வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு கடந்த வருடத்திலேயே வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் கூட்டுகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும்

### ஜனதா மித்துறு அமைப்பாளர்

(கொழும்பு)

தேர்தலை மையமாகக் கொண்டு ஏற்படும் கட்சி ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகள் தொடர்பாக மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் இவ்வாறு ஜனதா மித்துறுவின் அமைப்பாளர் பாலித்த விமலசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இனத்தைக் காக்கும் நடவடிக்கையானது உண்மையாகவே இனத்தைக் காக்கும் நடவடிக்கையாக இருக்க வேண்டும். தேர்தலை மையமாக வைத்து தேர்தல் மிகவும் அருகே இருக்கும் ஒரு நிலையில் நடத்தப்படும் போரங்களால் பாராளுமன்றத்திற்கு சென்று விடுவதால் மட்டும் இனத்தைக் காக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

### பொது ஜன ஐக்கிய முன்னணியின்

## தேர்தல் பிரசாரங்கள் சில தினங்கள் ஒத்திவைப்பு

பொது ஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் பிரசாரத்தை மேலும் சில நாட்களுக்கு ஒத்தி வைத்துள்ளது என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சி சில இறுதி முடிவுகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தேர்தல் கூட்டு தொடர்பாக மேலும் சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

எனினும் கட்சி ஒரு தெளிவான கொள்கையை வகுக்க முடியாது திண்டாடுவதே தேர்தல் பிரசார திகதியைத் தீர்மானிப்பதற்கு முடியாதிருப்பதற்குக் காரணம் என பார்வையாளர் தெரிவிக்கின்றனர்.

### கண்காட்சி

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தினால் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடத்தப்படும் ஆண்டு இரண்டு கற்பித்தற் சாதனக் கண்காட்சியை இன்று நண்பகல் பன்னிரண்டு மணி வரை பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இலவசமாக பார்வையிடலாமெனக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியில் இடம்பெயர்ந்தவர்களிற்கு வைகாசி மாதத்திற்கான இறுதி இருவார உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ளுமாறு ப.நோ.கூ சங்கங்களிற்கு அறிவித்துள்ளதாக தெரிகிறது. இதற்கு அரிசி, சீனி, பெருஞ்சீரகம், சின்ன சீரகம், பூடு, பயறு, பட்டாணிப்பருப்பு, சவ்வரிசி, நூடில்ஸ் வெந்தையம், பால்மா, போன்ற பொருள்கள் வழங்கப்படவுள்ளன இம்முறை கோதுமைமாவு புனர்வாழ்வுப் பகுதியினரின் இந்த அளவுத்திட்டத்தில் இடம்பெறவில்லை. (88)

## நிர்வாகிகள் தெரிவு

கிளிநொச்சிமாவட்ட செஞ்சிலுவை சங்கம் நடப்புஆண்டிற்கான புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்துள்ளது. சிவராஜலிங்கம் தலைவராகவும் தர்மரட்ணம் உபதலைவராகவும் விநாயக மூர்த்தி செயலாளராகவும், குணரட்ணம் பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டதுடன் மேலும் ஐவர் ஆளுநர்சபை உறுப்பினர்களாக தெரிவாகினர். போஷகர்களாக அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம், டாக்டர் ச. முருகானந்தன், டாக்டர் தணிகாசலம், திட்டப் பணிப்பாளர் இராசநாயகம், டாக்டர் திருலோகமூர்த்தி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். இத்தெரிவிற்கான வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெற்றபோது வன்னி மாவட்ட அரசியல் துறைபொறுப்பாளர் ஞானம் கிளிநொச்சி மாவட்ட பொது நிர்வாகப்பொறுப்பாளர் இளஞ்சேரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

## லலித் கொலையை விசாரிக்க விசாரணைக் குழு வரலாம்

(கொழும்பு)

நாடு தேர்தலொன்றை எதிர்நோக்கியிருக்கும் இத்தருணத்தில் எனது கணவரின் கொலை தொடர்பாக விசாரணைக் குழு அமைக்கப்படுமாயின ஆச்சரியப்பட எதுவுமில்லை என முன்னாள் தேசியப் பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் மனைவி சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

இதனை அரசாங்கம் ஒரு தேர்தல் பிரசாரமாகவே அமைக்கும் என தான் கருதுவதாக சிறிமானி அத்துலத் முதலி மேலும் தெரிவித்தார்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.07.04**
**திங்கள் இரவு**

08. 01 - கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி ''வெற்றி பெற்றுத் தந்தவர்கள்''
08. 20 - செய்திச்சரம்
08. 30 - செய்திகள்
08. 40 - தரிசனம் - தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்களுடனான செவ்வி

**1994.07.05**
**செவ்வாய் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்

## இன்று கொடியேற்றம்

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை (4. 7. 94) காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இக்கோவில் தேர்த்திருவிழா 13-ஆம் திகதி புதன் கிழமையும் தீர்த்தத்திருவிழா 14-ஆம் திகதி வியாழக்கிழமையும் பூங்காவனத்திருவிழா 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும்

## தாவரவியல்

களுக்குரிய பிரதான நகரங்களையும் அறிந்திருத்தல் அவசியமாகும்.




கட்டுரை வினாவையும் மாத்திரம் கருத்திற் கொள்ளுவோம்.

1988 **AUG**

★ கீழே தரப்பட்டுள்ள மழைவீழ்ச்சிப் பெறுமானங்களுள் இலங்கையின் தாழ்நாட்டு ஈரவலயத்தினது சராசரி வருடாந்த மழைவீழ்ச்சியைச் சிறப்பாக காட்டுவது எது?
(1) 100mm (2) 500mm (3) 750mm
(4) 1000mm (5) 2500mm இதில் ஐந்தாவது விடையே சரியானதாகும்.

1993 **AUG**

150mm இற்குக் கிட்டினதான வருடாந்த

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து கடந்த வெள்ளி இரவு 9.45 மணியளவில் கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கியே மேற்படி கலிபர் தாக்குதல்கள்


இவ்வாறானதொரு நிகழ்ச்சியாகவே டென்மார்க்கின் தீவொன்றில் 90 இலங்கைத் தமிழர் அண்மையில், கப்பலில் கொண்டு சென்று இறக்கிவிடப்பட்டமையைக் கொள்ளலாம். இட்டத்தட்ட உறைநிலை அளவில் வெப்பநிலை உள்ள இத்தீவுகளில் இறக்கிவிடப்பட்ட இவர்கள் ஒரு சில தினங்களுக்குள் கண்டுபிடிக்கப்படாது விட்டால், பனியிலேயே உறைந்து இறந்துபோய் விடக் கூட வாய்ப்புண்டு.

ஆனால், இது முதற் சம்பவம் அல்ல. இதற்கு முன்னரே பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கடும் குளிர் நிலவும் அத்திலாந்திக் சமுத்திரத்தின் வட கரையிலும், தீவுகளிலும் இவ்வாறு பலர் இறக்கிவிடப்பட்டுள்ளனர். இதைத்தவிர எல்லைகளைக் கடக்கவேண்டும், மேற்கு நாடுகளுக்குள் புகுந்துகொள்ள வேண்டும், என்ற நோக்கில் இலங்கைத் தமிழர் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் உயிரைப் பணயம் வைக்கும் நிகழ்ச்சிகளாகவே உள்ளன. துப்பாக்கிச் சூடு நடத்தக் கூடிய எல்லைகள், உறைபனியூடான நீண்ட கால்நடை பயணம், கப்பல்களிலும், அடைக்கப்பட்ட கொள்கலன்களிலும் ஆயிரக்கணக்கான மைல் பயணம் என அவர்களின் பயணங்கள் தொடர்கின்றன.


இவை யாவற்றிற்கும் அவர்கள் எதிர்பார்த்துச் செல்வது என்ன? இந்திய தமிழ் மக்கள் எவற்றை இங்கு தேடி வந்தார்களோ, அதே போன்றதொரு வளமான வாழ்க்கையைத்தான் அவர்கள் மேற்குலகில் தேடிச் செல்கின்றனர். ஆனால், அவர்களுக்கு அது கிட்டுகின்றதா என்பதே இன்றுள்ள கேள்வியாகும். ஆனால், சென்றடையும் வரையும் உயிரைப் பணயம் வைக்கும் இவ்வாழ்க்கை, சென்றடைந்த பின்னும் கூட இன்று மாறுவதாக இல்லை.

மேற்குலகம் இப்பொழுதும் அவர்களை நாடு கடத்தி விடுவதிலேயே குறியாக இருக்கின்றது. மனிதநேயம், மனிதாபிமானம் பற்றியும் சர்வதேச சட்டங்கள் பற்றியும் உரக்கப் பேசும் இந்நாடுகள், இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பாக அவற்றைக் கடைப்பிடிக்கத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

சுருக்கமாகக் கூறின், மேற்குலகத்திற்குள் இன்று புகும் இலங்கைத் தமிழர்கள் ஒருவகை நவீன அடிமைகளாகவே அங்கு உள்ளனர். நடத்தப்படுகின்றனர். இதற்கொரு சிறப்பான உதாரணம் அண்மையில் சுவிட்சர்லாந்து அரசாங்கம் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது என முடிவு எடுத்த போது, அங்குள்ள ஹோட்டல் உரிமையாளர்கள் அமைப்பு அதற்கு ஆட்சேபம் தெரிவித்ததாகும். அதற்கு அவர்கள் கூறிய காரணம், இலங்கைத் தமிழர் போன்று கடின உழைப்புடைய ஹோட்டல் சிப்பந்திகள் கிடைப்பது அரிது என்பதே ஆகும்.




இதேபோன்று ஒவ்வொரு காலநிலை வலயத்துக்குரிய மழைவீழ்ச்சி, வெப்பநிலை, பரம்பல் என்பவற்றையும் தனித்தனியாக வரைபு ரீதியில் அறிந்திருத்தல் அவசியமாகும். உதாரணத்திற்கு தாழ்நாட்டு ஈரவலய மழைவீழ்ச்சி, வெப்பநிலை, பரம்பல் வரைபாக தரப்பட்டுள்ளது.




காலநிலையியல் தொடர்பாக அண்மைக்காலங்களில் வந்துள்ள இருபல்தேர்வு வினாக்களையும் ஒரு

விடையே சரியானதாகும்.

### 1993 AUG

1500mm இற்குக் கிட்டினதான வருடாந்த மழைவீழ்ச்சியைக் கொண்ட பருவகால மழையைப் பின்வரும் எவ்விடத்தில் நீர் எதிர்பார்ப்பீர்?

1) இரத்தினபுரி 2) நுவரெலியா 3) மன்னார் 4) மாத்தறை 5) குருநாகலை

இடைவலயப் பிரதேசங்களிலேயே மேற்குறிப்பிட்ட மழை வீழ்ச்சி காணப்படுகிறது. ஆகவே பொருத்தமான விடை ஐந்தாவது ஆகும்.

### 1982 AUG

கீழே தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் இத்தீவு A,B,C,D,E,F என்கின்ற ஆறு வலயங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் காட்டுகின்றது,

அ) A,B,C ஆகிய வலயங்களைப் பெயரிடுக

ஆ) A,B,C ஆகிய வலயங்களின் முக்கியமான காலநிலைக்குரிய இயல்புகளைச் சுருக்கமாக குறிப்பிடுக

இ) காலநிலை வலயம் A,Fலிருந்து எவ்வாறு வேறுபடும்?

ஈ) A,B,C யிலுள்ள உச்சநிலை தாவர வர்க்க வகையை பெயரிடுக.

உ) A,B,C,D.E,F ஆகிய வலயங்களில் பின்வரும் தாவரங்களை எவ்வலயங்களில் அவதானிப்பீர்?

i) கித்துள் ii) விளாத்தி
iii) ஈரப்பத்தனை iv) வறள்நில தாவர வர்க்கம் v) கெக்கல பன்னங்கள்

மேற்குறிப்பிட்ட வினாக்களிற்கு திருப்திகரமாக விடையளிப்பதற்கு தரப்பட்ட அட்டவணையும், வரைபடங்களும் அவசியமாகின்றது.

காலநிலையியலுடன் தொடர்பாக இலங்கைக் காடுகள் பற்றியும் பிரபல்யமான வினாக்கள் ஒவ்வொருவருடமும் பல்தேர்வு வினாக்களாக, கட்டுரை வினாக்களாக அமைகின்றன. இலங்கைக்காடுகளில் அயனமண்டல மழைக்காடு, அயனமண்டல பருவக்காற்றுக்காடு என்பவற்றில் ஆழமான விடயங்களை பின்வரும் அம்சங்களில் அறிந்திருத்தல் அவசியமாகும்.

a) பரம்பல் b) மழைவீழ்ச்சி, வெப்பநிலை
c) மண்தன்மை d) தாவரங்களின் தன்மை
e) கனிப்பொருள்சக்கரம்
f) பிரதான தாவர வர்க்கம் (தாவர உதாரணம்)
g) தற்போதைய காட்டின் நிலை
h) பொருளாதார முக்கியத்துவம்

ஏனைய காடுகளான மலைசார்ந்த காடு, வறள் நிலக்காடு, சவானாக்காடுகள் என்பவற்றினது பரம்பல், தாவரங்கள் தன்மை என்பவற்றை அறிந்திருப்பதுடன் இங்கு காணப்படக்கூடிய தாவர இனங்களையும் ஞாபகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். குறிப்பிட்ட தொகையான சாதிகளை அட்டவணையாக்கி அவை இலங்கைக் காடுகளில் எவற்றிற்கு பொருத்தமானது என்பதனை அடுத்த கட்டுரைத் தொடரில் ஆராய்வோம்.

(வளரும் ....)

கொண்டனர்.

பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கியே மேற்படி கலிபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதே தினம் இரவு 12.30 மணியளவில் தீவகப்பகுதிகளிலிருந்தும், காரைநகர் இராணுவ - கடற்படை கூட்டு முகாம்களிலிருந்தும் மேற்குறித்த பகுதிகள் நோக்கி பலத்த எறிகணை வீச்சு இடம்பெற்றன. இவ் எறிகணைகள் மூளாய் கொத்தத்துறை ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்தன இதே வேளை சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இச்சம்பவங்களின் போது உயிர் சேதங்கள் எதுவுமின்றி மக்கள் தப்பித்துக் கொண்டனர் எனத் தெரியவருகின்றது. (41)

## கொலம்பிய உதைபந்தாட்ட வீரர் சுட்டுக்கொலை

(கொலம்பியா)

கொலம்பியாவின் பிரபல உதைபந்தாட்ட வீரர் எஸ்கோபர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இருபத்திஏழு வயதான இவர் அடித்த கோல் தொடர்பாக எழுந்த வாக்குவாதத்தின் பின்னர் ஒரு குழுவினர் அவரைச் சுட்டுக்கொன்றதாக சந்தேகிக்கப்படுகிறது. இரண்டு உலக வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகள் உட்பட 58 சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் கொலம்பியாவின் சார்பில் எஸ்கோபர் பங்குபற்றியுள்ளார். கொலம்பியா மாநிலத்தில் வைத்தே இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் தனது 21வது வயதிலிருந்தே சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி வந்துள்ளார். இவரது கொலை தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் மேலும் இருபர் தேடப்படுகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

## ஜேர்மனி, ஸ்பெயின் கால்இறுதிக்கு தகுதி

உலக வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகளில் கால் இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளும் தகுதி பெற்றுள்ளன.

சிக்காக்கோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஜேர்மனி 3-2 என்ற கோல் அடிப்படையில் பெல்ஜியத்தைத் தோற்கடித்தது.

வாஷிங்டனில் நடைபெற்ற போட்டியில் ஸ்பெயின் 3-0 என்ற கோல் கணக்கில் சுவிஸர்லாந்தைத் தோற்கடித்துள்ளது.

# யாழ். மாவட்டத்தில் போட்டியிட முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

## தெல்லிப்பழை செல்ல பாதுகாப்பு கோருகிறது

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது எனத் தீர்மானித்துள்ளது. இங்கு முன்னாள் வடமேல் மாகாணசபை உறுப்பினர் ஒருவரை தலைமை வேட்பாளராக நிறுத்துவது எனவும் தீர்மானிக்சப்பட்டுள்ளது.

இ. தொ. கா. தலைவர் தொண்டமானும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் முன்வைத்திருக்கும் இனப்பிரச்சனை தீர்வு திட்டத்திற்கு தமிழ்-முஸ்லிம் மக்களின் ஆணையைப்பெற பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட தீர்மானித்ததாக முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது.

இதனிடையே அஷ்ரப் தலைமையிலான கோஷ்டி தேர்தல் ஆணையாளர் ஆர். கே. சந்திரானந்தடிசில்வாவை கடந்த சனியன்று சந்தித்தது.

யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் தம் திட்டத்தை இவர்கள் ஆணையாளருக்கு எடுத்துக்கூறினர். தெல்லிப்பழையில் வேட்புமனு தாக்கல் செய்யும்போது தமக்கு பாதுகாப்பு போக்குவரத்து பற்றி இவர்கள் ஆணையாளர் கவனத்திற்கு கொண்டுவந்தனர். யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவோர் தெல்லிப்பழைக்கு வேட்புமனுதாக்கல் செய்ய செல்ல விசேட விமானம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விமானத்திற்கான கட்டணத்தை வேட்பாளர்களே செலுத்தவேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

## மட்டு. மாவட்டத்தில் பல முனைப் போட்டி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ. தே. க., சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எப், முஸ்லிம் காங்கிரஸ், ஆகிய கட்சிகள் நேரிடையாக போட்டியிடுகின்றன. ரெலோ புளொட், ஈரோஸ் என்பன இணைந்து சுயேட்சை குழுவை நிறுத்த நடவடிக்கை எடுக்கின்றன. ஈ. பி. டி. பியும் சுயேட்சையாக போட்டியிட முடிவு செய்துள்ளது.

மட்டக்களப்பில் இதன் காரணமாக பல முனைப் போட்டி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சர் ஹமீட் தேர்தலில் போட்டியிடார்

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீட் போட்டியிடமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இவரின் பெயர் ஐ தே. கவின் தேசியப்பட்டியலில் உள்ளதாகக் கூறப்படுகிறது. இவர் முன்னர் போட்டியிட ஹரிஸ்பத்துவ தொகுதியில் இவரின் மகன் போட்டியிடுகிறார்.

மேலும் அநுரா பண்டாரநாயக்கா, சிறிசேனகூரே, சொக்ஸி ஆகியோரும் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.


யாழ். ஸ்ரீதரில்

மாலை 4.00 மணி காட்சியாக

உயிராயுதம்

மாலை 6.00 மணி காட்சியாக

JURASSIC PARK

நாளை கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு,

காலை 10.30 மணி காட்சியாக

மே '94 ஒளிவீச்சு

மாலை 4-00 மணி காட்சியாக

உயிராயுதம்

மாலை 6-00 மணி காட்சியாக

தாயகக்கனவு


## வலைப்பந்தாட்ட போட்டி

கல்வித் திணைக்களம் வலயம் இரண்டிற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 2-30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் 17 வயது பிரிவு மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி எதிர் வட இந்து மகளிர் கல்லூரி. 19 வயது பிரிவு உடுவில் மகளிர் கல்லூரி எதிர் மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி.

## இனநெருக்கடிக்கு

இரு பிரதான கட்சிகளும் தேர்தல் காலங்களில் சிறுபான்மையினர் மீது அக்கறை கொண்டிருப்பதாக பாசாங்கு செய்வதும் அதிகாரத்தில் இருக்கும் போது சிறுபான்மையினரை அலட்சியம் செய்வதும் இலங்கையின் சரித்திர நிதர்சனமாகிவிட்டது.

இலங்கை அரசு சிங்கள சமூக நலனுக்காக திட்டமிட்ட ரீதியில் பயன்படுத்தப்பட்டு வந்தது இரு பிரதான கட்சிகளும் விளங்கிக் கொண்ட ஜனநாயகம் என்பது பெரும்பான்மையின் அப்பட்டமான சர்வாதிகாரமேயன்றி வேறேதுமில்லை தேர்தலில் ஆதரவையும் அளித்து பதவி

## அவசரகால சட்டம் 15உடன் நீக்கம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது. அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்கும் வகையில் தற்போது பாராளுமன்றம் இல்லை என்பதால் தேர்தல் காலத்தில் அவசரகால நிலை இருக்கமாட்டாது என கூறப்படுகிறது.

## கரும் புலிகள் நாள்

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தினால்இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 'கரும்புலிகள் நாள்' நிகழ்வு நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் கரும்புலிகள நினைவுரைகளைத்தொடர்ந்து இரு கரும்புலிகளின் ஒளிப்பதிவு நாடா காண்பிக்கப்படும்.

## தமிழீழ

ளர் திரு. தமிழ்ச்செல்வன் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## கரும்புலிகள் உருவ

கண்டிவீதி யூடாக கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் வரை சென்றடைந்து அங்கிருந்து புத்தூர்ச்சந்தி, கனகம் புளியடி ஊடாக வடமராட்சியைச் சென்றடையவுள்ளது.

இவ் ஊர்தி வரும்போது மக்கள் வீதிகள் தோறும் அணிதிரண்டு விளக்கேற்றி மலர் தூவி அஞ்சலிகளைச் செலுத்துவர். (பா),(தி)

## அநாமதேய

கட்டி இழுத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்து ஜீப்பில் குண்டு பொருத்தப்பட்டுள்ளதா என துருவித் துருவி ஆராயப்பட்டது. இதற்கென வெடிகுண்டு கண்டறியும் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. இறுதியில் வாகனத்தில் எக் குண்டும் வைக்கப்பட்டிருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டது.

# இரு மீனவர்கள் கடற்படையால் கைது

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த இரண்டு மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

இக் கடற்பரப்பில் நேற்றுக் காலை 6. 25 மணியளவில் ரோந்து சென்ற கடற்படையினர் இவர்களை கைது செய்துள்ளனர் அப்பாவி மீனவர்களான இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது பீரங்கிமற்றும்துப்பாக்கிவேட்டுக்களை பிரயோகித்தவாறு சுற்றிவளைத்த கடற்படையினர் இருவரையும் பிடித்துச் சென்றுள்ளனர்.

பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான சி. தங்கராசா (வயது 65), இன்பருட்டியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராமலிங்கம் சாந்தகுமார் (வயது 30) ஆகிய இருவரையுமே கடற்படை பிடித்துச் சென்றது இவர்களது வலை, கட்டுமரங்கள் அவர்களினது உறவினர்களால் மீட்கப்பட்டன.

## பாடசாலைகள்

குலைந்து போயிருக்கின்றான். தனியொரு மனிதனால் பாரிய வெற்றியை இயக்கத்திற்கும், நாட்டிற்கும் ஈட்டித்தர முடியும் என எமக்கும், எமது மக்களுக்கும் வெளிக்காட்டியவர்கள் இந்தக் கரும்புலிகள்.

எமது நாட்டின் மக்கள் தொகையில் கணிசமான பங்கைக் கொண்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக எமது தேசியத் தலைவர் பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றார், எதிர்காலத்தில் எமது மாணவர்கள நாட்டுப்பற்றுள்ளவர்களாக, தாய்மொழியை ஆழமாக நேசிப்பவர்களாக, வீரம் மானம் துணிவுமிக்கவர்களாக உருவாகி நாட்டைச் சிறந்த முறையில் கட்டியெழுப்புபவர்களாக மாற வேண்டும் என்பதே எமது தேசியத் தலைவரின் எண்ணமாகும்.

எமது மண்ணில் எதிர்காலத்தில், எமது மக்கள் தன்னாட்சி உரிமை பெற்றவர்களாக வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக தங்களையே அழித்து தமிழனின் வீரத்தையும் மானத்தையும் வெளிக் காட்டிய அற்புதமானவர்களின் தற்கொடையை நாம் ஆழமாகப் பார்க்க வேண்டும்.

எமது தாய்நாட்டையும், தாய்மொழியையும் மிகவும் ஆழமாக நேசித்து, தங்களின் இழப்பினால் பாரிய வெற்றியை ஈட்டித்தந்து, எதிர்கால சமுதாயத்தின் சுபீட்சத்தில் மகிழ்ச்சியடைகின்ற அந்த மாவீரர்களை நினைவில் கொள்ளுமுகமாக பாடசாலைகள் தோறும் சிறப்பு வைபவங்களை ஏற்பாடு செய்வதோடு கரும்புலிகள் நாளான யூலை 5-ல் அனைத்து மாணவர்களும் காலையில் தங்கள் பாடசாலையில் ஒன்றுகூடி எமது தாய்நாட்

## சிரமதானம்

நாவற்குழி தெற்கு அருள் வீதியில் உள்ள கிராமத்தில் கரும்புலிகள் நினைவாக காலை 8 00 மணிக்கு சிரமதானமும், பின்னர் கரும்புலிகள் நினைவு தினக் கூட்டமும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## கரும்புலிகள் நினை

நாளை காலை தேசியக் கொடி ஏற்றலுடன் கரும்புலிகள் தின நிகழ்வுகள் ஆரம்பமகின்றன. தொடர்ந்து கோட்ட ரீதியாக மாலை பொதுக்கூட்டங்களும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இவை வலிகாமம், வடமராட்சி. தென்மராட்சி கோட்டங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதுடன் கடற்புலிகளும் தீவகக்கோட்டமும் இணைந்துநடாத்தும் பொதுக்கூட்டம் வலிகாமப் பகுதியிலும் நடைபெறவுள்ளன. இதன்போது விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் உரை நிகழ்த்தவுள்ளனர். இதே வேளை நாளைய கரும்புலிகள் தினத்தையொட்டி குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளும் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டுள்ளன. பிரதான வீதிகள், சந்திகள், வீட்டு வாயில்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் கரும்புலிகளின் உருவப்படங்கள் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. வீதிகள் இருமருங்குகளிலும் சிவப்பு, மஞ்சள், கறுப்புநிறவர்ண அலங்காரங்கள் காணப்படுகின்றதுடன் தோரணங்களும் தொங்கவிடப்பட்டுள்ளன.

## வெற்றிக் கிண்ணம் யாருக்கு?

'94 உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறப் போகும் அணிகளை வரிசைக் கிரமமாகத் தெரிவு செய்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். விண்ணப்பங்கள் பிரசுரமாகியுள்ள விண்ணப்பப்படிவத்தில் அனுப்பப்பட வேண்டும். பரிசு பெறுவோர் குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவர்.

**முதலாம் பரிசு 500 ரூபா**

**இரண்டாம் பரிசு 300 ரூபா**

**மூன்றாம் பரிசு 200 ரூபா**

9-7-94 அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் தபால் மூலமோ அல்லது நேரிலோ கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

முகவரி;

உலகக்கிண்ண உதைபந்தாட்டம் '94
ஈழநாதம் காரியாலயம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

## வெற்றிக் கிண்ணம் யாருக்கு?

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி '94

1-ம் இடம்: ..............

2-ம் இடம்: ..............

3-ம் இடம்: ..............

பெயர்:- ..............

விலாசம்:- ...... ......

கையொப்பம்:- ...... ......

2-வது பிறந்தநாள் வாழ்த்து

மாலை 6-00 மணி காட்சியாக

தாயகக்கனவு

காண்பிக்கப்படும்

6-7-94 இல் இருந்து மீண்டும்

**JURASSIC PARK**

காண்பிககப்படும் (சி-9872)

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம

## வெற்றுப்போத்தல்கள் தேவை

முக்கால் போத்தல்கள். அரைப் போத்தல்கள் (சிவப்பு போத்தல்கள் விரும்பத்தக்கது) அரைப் போத்தல்கள் தேவைப்படுவதால் கீழ்க்கண்ட விலாசத்துக்கு விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்**
பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம் - கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(8712)

சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொத்தணிகளுக்குமான

## முக்கிய அறிவித்தல்

கரும்புலிகளை நினைவு கூரும் நாளான யூலை 5ஆம் திகதி எமது சகல கிளை நிலையங்களிலும், கொவ னவை மட்டும் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன் அன்றைய விசேட பொது நிகழ்வுகளில் சகல பணிப்பாளர்களும், பணியாளர்களும். மகளிர் குழுக்களும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்,

**பொது முகாமையாளர்**
வடமாகாண ப. தெ. வள
அபி. கூ. ச. சமாசம்.

1994-07-03

(சி-9742)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பெரும்பான்மையின் அப்பட்டமானசர்வாதிகாரமேயன்றி வேறேதுமில்லை தேர்தலில் ஆதரவையும் அளித்து பதவியில் உள்ள அரசிற்கு ஒத்துழைப்பையும் அளித்து சிறுபான்மை இனங்கள் தம்மையும் அறியாமல் சிங்கள மேலாதிக்கத்திற்கு துணைபோயினர்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக சிறுபான்மையினரின் வாக்குகளை கைப்பற்றுவதற்காக அவர்களை வஞ்சகத்தனமாக அரவணைத்து பின்னர் அதிகாரத்திற்கு வந்ததும் சிறுபான்மையினரின் உரிமைகளை மறுத்து கடந்த காலததில் செயற்பட்ட இரு பிரதான கட்சிகளுக்கும் சிறுபான்மையினர் இம்முறை ஆதரவளிக்கக் கூடாது.

இரு பிரதான கட்சிகளுக்குமான ஆதரவை மறுப்பதன் மூலம் இனப்பிரச்சினையை கடந்த காலத்தில் தீர்க்க விருப்பம் இல்லாமல் இருந்த எந்த ஓர் அரசுக்குமே ஆதரவளிக்கவில்லை என சிறுபான்மையினங்கள் உரிமை கோரிக்கொள்ள முடியும்என அந்த அமைப்பு விடுத்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

### தரணியெங்கும்

லண்டனில் உள்ள நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ளது. இந்நிறுவனத்தின் தலைவராக லண்டன் பொருளாதாரவியல் கல்லூரியின் இறுதியாண்டு பட்டதாரி மாணவரும் பிரித்தானிய தமிழ் தகவல் ஏடுகள் நூலின் நிர்வாக ஆசிரியருமான திரு லிங்கநாதன் விளங்குகிறார் நிகழ்ச்சி தயாரிப்பு இயக்குனராக மனநோய் மருத்துவரும் எழுத்தாளருமான முன்னாள் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஒலிபரப்பாளருமான டாக்டர் இந்திரகுமார் விளங்குகிறார். ஒளிபரப்பிற்கான செய்மதி தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கடந்த வாரம் லண்டனில் உள்ள செய்மதி நிறுவனம் ஒன்றுடன் கைச்சாத்தாகியுள்ளது.

வாகனத்தில் எக் குண்டும் வைக்கப்பட்டிருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டது.

### கரும்புலிகளின்

க்கம் கரும்புலிகள் தினத்தை அனுஷ்டிக்கவுள்ளதால், இத்தினத்தில் தாக்குதல்கள் நிகழ்த்தப்படலாம் எனவும் அஞ்சப்படுகின்றது. இதைத் தொடர்ந்தேவிமானப்படைத் தலைமையலுவலகத்தைகரும்புலிகள் நாளான ஜூலை 5 ஆம் திகதி மூடிவிட முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

### கரும்புலிகள்

வெடிப்புகள் குறித்து மிகுந்த அவதானமாக இருக்கும் படியும் சகல பொலிஸ் நிலையங்களையும் உசார் நிலையில் இருக்கும் படியும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கடந்த சில நாட்களாக நூற்றுக் கணக்கில் தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிசாரால்கைது செய்யப்பட்டுள்ளனர். வீதித் தடைகள் போடப்பட்டு முப்படையினர் கடந்த வெள்ளி இரவு பெரும் தேடுதலை நடத்தினர். கொட்டாஞ்சேனை, மாளிகாவத்தை. பம்பலப்பிட்டி, மருதானை, வெள்ளவத்தை புறக்கோட்டை ஆகிய பகுதிகளிலேயே கூடுதலானோர் கைதாகியுள்ளனர்,

கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் கடந்த வெள்ளியன்று பிராந்தியத்தின் சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளையும் அழைத்து மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அவசர மாநாடுஒன்றை நடத்தினார். பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற இம் மாநாட்டையடுத்து தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாகின. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பொலிஸ் நிலையங்கள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

நாளான யூலை 5-ல் அனைத்து மாணவர்களும் காலையில் தங்கள் பாடசாலையில் ஒன்றுகூடி எமது தாய்நாட்டின் தேசிய கொடியை ஏற்றி மௌன அஞ்சலி, மலரஞ்சலி செலுத்துவதோடு கரும்புலிகளின் படங்களை பாடசாலை மண்டபத்தில் தொங்கவிட்டு திரைநீக்கம் செய்யுமாறும் கரும்புலிகளின் தற்கொடையைச் சித்திரிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமாறும், கரும்புலிகளின் நினைவாக அடையாளப்பட்டியை அணிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்,

### அமெரிக்கா

இலங்கையில் உள்ள ஒவ்வொரு சமூகமும் தன்னை சிறுபான்மை என உணர்கிறது இலங்கை நெருக்கடியை கையாள்வதில் உள்ள சிக்கலே இதுதான் தமிழர். கிறிஸ்தவர், முஸ்லிம்கள் இலங்கையின் சிறுபான்மையினரே. ஆனால் சிங்களவர்களோ தென்னாசியாவில் தாம் சிறுபான்மை அந்தஸ்தில் இருப்பதாக உணர்கின்றனர் என்றார்.

### அரசியல்

அழிப்பதன் மூலம் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என உயர் மட்ட புலனாய்வாளர்கள் கருதுவதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### நாளை

வன்னி தொடர்பு சேவைச் செயலகம் என்பன திறக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

### சமூகரீதியான

லாக்கலுக்கானநிருவாகஅடிப்படைகள் தேவையான வகையில் அரசியற் சட்ட திருத்தங்கள் என்பனவே முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளாகும்.

## 2-வது பிறந்தநாள் வாழ்த்து 4-07-94



## செல்வன் டிஷாந்த


வாதரவத்தையைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன்-கலாராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் செல்வன் டிஷாந்த் இரண்டாவது பிறந்த நாளை 04-07-94 இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தம்பி பிரஷாந், உறவினர்கள் படகு சேவை ஊழியர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

-ஜெகதீஸ்வரன்
குடும்பத்தினர்


(8709)

# தியாகத்தின்


# கரும்



கரும்புலி
**கப்டன் மில்லர்**
(வல்லிபுரம் வசந்தன்)




கரும்புலி
**லெப். கேணல் போர்க்**
(மா. அரசரத்தினம்)



கடற்கரும்புலி
**கப்டன் கொலின்ஸ்**
(பர்ணாந்து சில்வெஸ்டர்)




கரும்புலி
**மேஜர் டாம்போ**
(காசிப்பிள்ளை தயாபரன்)




கடற்கரும்புலி
**கப்டன் ஜெயந்தன்**
(சம்புக்குட்டி பத்மநாதன்)



கடற்
**கப்டன்**
(பெரியதம்




கடற்கரும்புலி
**கப்டன் மணியரசன்**
(வேதநாயகம் ராஜரூபன்)




கடற்கரும்புலி
**மேஜர் கணேஸ்**
(நாகநாதி ஜீவநேசன்)




கடற்கரும்புலி
**மேஜர் குமணன்-கோபி**
(சுப்பிரமணியம் செல்வலிங்கம்)



**மேஜர் தொண்டமான்**
(கண்ணப்பர் நல்லதம்பி)




**கப்டன் ஐயனார்**
(செல்வநாயகம் ராசசேகரம்)



**கப்டன் சீராளன்**
(ஞானப்பிரகாசம் குணம்)




**கப்டன் செந்தமிழ்நம்பி**
(செல்லத்துரை ஜெகன்)




**லெப். ஜீவரஞ்சன்**
(கிருஸ்ணபிள்ளை முருகுப்பிள்ளை

# சிகரங்களான

# புலிகள்



கடற்கரும்புலி
**மேஜர் காந்தரூபன்**
யோகராசா கோணேஸ்வரன்



கடற்கரும்புலி
**கப்டன் வினோத்**
(வேலுப்பிள்ளை திலகராசா)



...கரும்புலி
**...சிதம்பரம்**
(... சந்திரன்)




கடற்கரும்புலி
**மேஜர் நிலவன்-வரதன்**
(கந்தசாமி இராமச்சந்திரன்)




கடற்கரும்புலி
**கப்டன் மதன்**
(சீனிவாசகம் சிவகுமார்)




கடற்கரும்புலி மேஜர்
**புகழரசன்-புவீந்திரன்**
(சுப்பிரமணியம் நாககீதன்)










(சீனிவாசகம் சிவகுமார்)

(சுப்பிரமணியம் நாககீதன்)



மேஜர் கலையழகன்
(பொன்னையா பேரின்பராசா)




கப்டன் சிவலோகன்
(சின்னத்தம்பி அருளானந்தம்)



கப்டன் மதிநிலவன்
(கணபதிப்பிள்ளை தவராசா)



கப்டன் கரிகாலன்
(இரத்தினசிங்கம் பிரபாகரன்)



லெப்ரினன்ட் வீரமணி
(தெய்வேந்திரம் சுதாகர்)



லெப். நல்லதம்பி
(தங்கராசா கோகுலநாதன்)



லெப். செங்கண்ணன்
(செந்தூர்பாண்டியன்)



லெப். கண்ணன்
(நவரட்ணம் நேசகுலேந்திரன்)